Registered as a News paper i. Ceylo * விலை சதம் 10




ராஜ பீடி கம்பெனி, கொழுப்பு-14

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [15-7-67] இதழ் 154
யாழ்ப்பணம் பிலவங்க ஆனி 31 ரபி ஆகி 6 சனிக்கிழமை




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# நீர்கொழும்பில் யு. என். பி. வெற்றி; டென்சில்

## எம். பி. யானர்

## பெரும்பான்மை வாக்குகள் 7,282

கொழும்பு, வெள்ளி

நீர்கொழும்பு எம். பி. யாக ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த நிக்கலஸ் டென்ஸில் பெர்ணண்டோதேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யைச்சேர்ந்த டாக்டர் லின்னஸ் சி திஸநாயக் காவை விட 7282 அதிகப்படிவாக்குகளால் இவர் வெற்றிபெற்ருர். இவருக்குக் கிடைத்த [மொத்த வாக்குகள் 18,751

நேற்றையதினம் நடைபெற்ற நீர்கொழும்பு உபதேர் தல் வாக்குகள் கொழும்பு கச்சேரியில் எண்ணப பட்டு இன்று அதிகாலை 2-41 மணிக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

நீர்கொழும்பு எம் பி. யாகவிருந்த திரு. குயின்ரன் பெர்ணண்டோ காலமானதைத் தொடர்ந்து நடை பெற்ற இந்த இடைத்தேர்தலில் 6 அபேட்சகர்கள் போட்டியிட்டனர். [6ம் பக்கம் பார்க்க]

# டிசம்பரில் யாழ். மாநகரசபை தேர்தல்?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தல் இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறுமென தெரியவருகிறது. இத்தேர்தலுக்கான ஒழுங்குகளை ஸ்தலஸ்தாபன அமைச்சு செய்துவருவதாகவும் அறியப்படுகிறது

மார்டின்கமிஷன் அறிக்கை அமுல் நடாத்தப்படாதென் றும், புதிய வட்டாரஎல்லைக் கமிஷன் நியமிக்கப்படா தென்றும், ஸ்தலஸ்தாபன அமைச்சு வட்டாரங்களிலி ருந்து தெரியவருகிறது.

தற்பொழுதுள்ள 17 வட் டாரங்களுக்கே தேர்தல் நடைபெறவிருப்பதாகவும், இதற்கான வாக்காளர் இடாப்பு தயாரிக்கவேண் டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம், பிரதமர் டட்லி சேனநாயக் காவுடன், யாழ்ப்பாண மாநகரசபை தேர்தல் சம் பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியபின், தேர்தல் பற்றி, அடுத்தமாதம் அறி விப்பார் என எதிர்பார்க் கப்படுகிறது. [அ. நி.]

## புதியவட்டார நிர்ணயகமிஷன்

### நியமிக்க வேண்டுமென தமிழ்காங்கிரஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபைத்தேர்தலை தற்போ துள்ள வட்டாரங்களின்படி நடத்துவது சரியல்லவென் றும் புதிய வட்டார எல்லை நிர்ணய கமிஷன் ஒன்று நிய மித்து விசாரணை நடை பெற்றபின்பே தேர்தலை நட த்தவேண்டுமென்றும் கோரி பிரதமர் டட்லி சேனநாய காவிடம் ஒரு மகஜர் சமர்ப் பிப்பதென தமிழ்க் காங்கி [6-ம் பக்கம் பார்க்க]

## “இன்றில்லா விட்டாலும், ஒருகாலத்தில் ஒன்றுபட்டால்தான் உரிமைபெறமுடியும்”

### பருத்தித்துறை எம். பி. கூறுகிறர்

யாழ்ப்பாணம், சனி

“தனித்து நின்று எந்தக் காரியமும் பார்க்கமுடி யாது. நமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கூட் டாக ஒன்றுசேர்ந்து நின்ருல் தான் இன்றில்லாவிட்டா லும் ஒருகாலத்தில் பெற் றுக்கொள்ளமுடியும்.”

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்றுக் காலையில் நடந்த அகில இலங்கை சுவிகரிக்கப் பட்ட பாடசாலை ஆசிரிய ரல்லாத ஊழியர் சங்க இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பருத் (6ம் பக்கம் பார்க்க)

## உற்பத்தி வரியை நீக்க நடவடிக்கை

### சுருட்டு தொழிலாளர் சங்க தூதுகோஷ்டிக்கு அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், சனி

சுருட்டுத் தொழிலாளர் களைப் பாதித்துவரும் உற் பத்தி வரியை நீக்குவது சம் பந்தமாக, நிதிக் கமிட்டி யில் தீர்மானித்து நடவடி க்கை எடுப்பதாடு நிதி மந் திரி திரு. யு. பி. வன்னிநா யக்கா, அவரைப் பேட்டி கண்ட இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தூது கோஷ்டியிடம் தெரிவித் தார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் 15 இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங் கப் பிரதிநிதிகள் நிதிமந்திரி யைப்பேட்டிகண்டனர். அச் சமயம் வருமானவரிக் கமிஷ னர் திரு. சிற்றம்பலம், நிதிய மைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. என் விமல சேனு ஆகியோர் சமுகமளித் திருந்தனர்.

உற்பத்தி வரி மூலம் 10 ஆயிரம் சுருட்டுத் தொழி லாளரும், யாழ்ப்பாணம், மன்னர், குருநாகல், கண்டி, தம்பன்கடவையைச் சேர் ந்த சுமார் 50 ஆயிரம் புகையிலைச் செய்கை விவ சாயிகளும் பாதிக்கப்பட்டுள ளதாக திரு. சிவசிதம்பரம் மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

உற்பத்தி வரி மூலம் அர சாங்கம் பெறும் பணம் மிக வும் சொற்பமென்றும், இதனை நீக்காவிடில் விரை வில் வடபகுதியில் சுருட்டுத் தொழிற்சாலைசளை மூட வேண்டிய நிலைமை ஏற்டு மென்றும் திரு. சிவசிதம்ப ரம் மேலும் தெரிவித்தார்.

உற்பத்தி வரியை நீக்கு வது சம்பந்தமாக நடவ டிக்கை எடுப்பதாக நட வடிக்கை எடுப்பதாக நிதி மந்திரி தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார். [அ. நி.]

## ‘யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்’ வேண்டுமென குரல் எழுப்புங்கள்

### ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் சின்னத்தம்பி

— நமது நிருபர் வி. பரிபூரணனந்த சர்மா —

உடுவில், வெள்ளி

“தமிழ்ப் பிள்ளைகளுக்கு இன்று வேண்டுவது ஒரு பல் கலைக்கழகமே. அது இந்துப் பல்கலைக்கழகமாகவோ தமிழ்ப் பல்கலைக்கழகமா கவோ கிடைக்க வேண்டும் என்பதில் எழுந்த பிரச்னை யால் பல்கலைக்கழகமே கிடைக்காமல் போய் விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. தமிழ் மக் களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்ருல் ஒருமித்த குரலில் ‘யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம்’ வேண்டும் என்று குரல் எழுப்புங்கள்.”

கந்தரோடை ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரிப் பரி சளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய பேராசிரியர் திரு. அ. சின் னத்தம்பி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. அ. சின்னத்தம்பி மேலும் கூறியதாவது!

தமிழ்மக்களின் ஒருமைப் பாட்டையும், தனித்துவத் தையும் கருத்தில்கொண்டே பல்கலைக்கழகம் அமைக்கப் படல் வேண்டும்.

தமிழ்மக்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகி யவை பாதுகாக்கப்படவும், தமிழினத் தவரிடையே தொழில் வாய்ப்புக்களை ஏற் படுத்தி தமிழினத்தை ஒரு தனியினமாக- சமுதாயமாக வாழ வைக்க வேண்டும் என்ற நோக்குடனேதான 1958-ம் ஆண்டில் நீட்டான் குழுவின்கீழ் தமிழருக்கு பல் கலைக்கழகம வேண்டும என்ற இயக்கம் ஆரம்பமாகி யது. நீட்டான்குழுவின்பின் வந்த குணவர்த்தன கமி ஷன் குழுவும் இவ்விய. [6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகர்**

அன்பு தழைக்கும் இடத்தில் தான் அறம் தழைக்கும். அறம் தழைக்கும் இடத்தில் தான் ஆண்டவன் இருப்பான். இதை அறியாது இருட்டறையில் இறைவனை தேடி அலைபவர்கள் முட்டாள்கள்.

— தாகூர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

ஈசுரபாகம் பிலவங்க வருடம்
ஆனி மீ 31உ (15 7-67)


## நீர்கொழும்பு அளித்த தீர்ப்பு

நீர்கொழும்புத் தொகுதி உப தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக் கட்சி அபேட்சகரான திரு. டென்ஸில் பெர்ணாண்டோ வெற்றிபெற்றிருக்கிறார்.

தேசிய அரசாங்கம்ஆட்சிக்கு வந்தபின் அதாவது 1965-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின் நடைபெற்ற உபதேர்தல்களில் இப்பொழுதுதான் முதல் தடவையாக ஆளும்கட்சி அபேட்சகர் ஒருவர் வெற்றி பெற்றிருக்கிறார். அடுத்தடுத்து நடைபெற்ற எட்டு உபதேர்தல்களில் ஒரு தொகுதி [பலாங்கொடை] உபதேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் அபேட்சகர் நிறுத்தப்படவில்லை] தவிர ஏழு தொகுதிகளிலும் ஆளும் கட்சி அபேட்சகர்கள் தோல்வி கண்டனர். இந்த ஏழு தொகுதிகளிலும்கூட பெந்தர—எல்பிட்டித் தொகுதியில் மட்டும்தான் ஆளும் கட்சிக்கு உண்மையான தோல்வி ஏற்பட்டதென்றுசொல்ல வேண்டும். இதர ஆறு தொகுதிகளிலும் எதிர்க்கட்சி அபேட்சகர்கள் பெற்ற வெற்றி அவர்கள் தங்களது ஸ்தானங்களைக் காப்பற்றிக்கொண்ட வெற்றிதான். பெந்தர—எல்பிட்டித் தொகுதிமுன்னர் ஆளும் கட்சிக்கு இருந்தது. அதை எதிர்க்கட்சியினர் கைப்பற்றிக் கொண்டனர். அதுஅவர்களுக்கு ஒரு பெரும் வெற்றி. நீர்கொழும்புத் தொகுதியும் முன்னர் ஆளும் கட்சிக்கே இருந்தது. இந்த உப தேர்தலில் அந்த ஸ்தானத்தை அது காப்பாற்றிக்கொண்டது. தனது ஸ்தானத்தைக்காப்பாற்றிக்கொண்டதால் இது ஆளும் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றியென்று கூற முடியாதெனக் கருதலாம். ஆனல் இதுவரை நடந்த உப தேர்தல்களில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாது, எதிர்க்கட்சிப்பக்கமாகவே வீசிய காற்றை நீர்கொழும்பு உபதேர்தல் முடிவு திசை திருப்பி விட்டிருப்பதன் மூலம் ஆளும் கட்சிக்கு இது ஒரு மகத்தான வெற்றி என்று சொல்ல வேண்டும்.

இதுவரை நடைபெற்ற உபதேர்தல்கள் எதிலும் தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொண்டு பிரசாரம் செய்யவில்லை. நீர்கொழும்புத் தொகுதி உபதேர்தலில் மட்டும்தான் தமிழ்ப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இத்தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னர்தான் இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல், மாவட்ட சபை அமைப்பு, உணவு உற்பத்தி இயக்கத்தைத் தீவிரப்படுத்துவது ஆகிய அரசாங்கத்தின் கொள்கையைப் பிரகடனம் செய்யும் சிம்மாசனப் பிரசங்கம்நிகழ்த்தப்பட்டது. எனவே நீர்கொழும்புத் தொகுதியில் ஆளும் கட்சிக்குக் கிடைத்த வெற்றி தேசிய ஐக்கியத்துக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் மக்கள் அளித்த அங்கீகாரம் என்று கொள்ளலாம்.

1965-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி அபேட்சகருக்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்குகளைவிட இந்த உபதேர்தலில் கிடைத்த பெரும்பான்மை வாக்குகள் குறைவானதென்றும் இது அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையை இழந்துவருவதையே குறிக்கிறதென்றும் சிலர் கூறலாம்.

சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குந் நேரடிப் போட்டியிருந்தது. இந்த உபதேர்தலில் ஆறு அபேட்சகர்கள் போட்டியிட்டனர். ஆனல் சென்ற பொதுத்தேர்தலில் இருந்த வாக்காளர் தொகை 37,900 என்றும், இம்முறைவாக்காளர்தொகை 43,358 ஆக அதிகரித்திருக்கிறதென்றும் கூறலாம். 32,569 வாக்காளர் இருந்த 1960-ம் ஆண்டு ஜூலை பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகருக்கு 7,108 வாக்குகள் கிடைத்தன. 1965-ம் ஆண்டில் வாக்காளர் தொகை 37,900 ஆக அதிகரித்த போதிலும் அந்தத் தேர்தலில் சுதந்திரக்கட்சி அபேட்சகருக்கு 6,766 வாக்குகள்தான் கிடைத்தன. எனவே வாக்காளர் தொகை அதிகரிப்பதைக் கொண்டுபெரும்பான்மை வாக்குகளும் அதிகரிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் நியாயமிருக்கிறது என்று கூறலாமா?

தேசிய ஐக்கியத்தைமக்கள் விரும்புகிறார்களென்பதையும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இதர சமூகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை மக்கள் ஆதரிக்கிறார்களென்பதையும் நீர்கொழும்பு உபதேர்தல் முடிவு எடுத்துக்காட்டுகிறது. அரசாங்கத்துக்கு உறுதியும் துணிச்சலும் தான் தேவை என்பதையும் நீர்கொழும்பு உணர்த்தியிருக்கிறது.

## ''மனிதவாழ்வுக்கு மணிவாசகம்''

புன்னாலைக்கட்டுவன்வெள்ளி

''பொருள்முதல் வாதமும் விஞ்ஞானமும் ஒன்றோடொன்று போட்டியிட்டு, மனிதாபிமானத்தையும்மனிதனின் சிறந்த பண்புகளையும் சந்தைச் சரக்குகளாக்கும் இன்றைய கால கட்டத்தில் மனித சமுதாயத்தின் சமாதான வாழ்வுக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் வேண்டிய ஒரேமருந்து திருவாசகமென்னும் மணிவாசகத் தேன்ஆகும் ''என்று பண்டிதை [செல்வி] தவமலர் சின்னத்துரை நேற்று முன் தினம்மாலை உரும்பராய் இந்துக்கல் லூரியில்நடைபெற்ற மணிவாசகர் விழாவில் உரையாற்றுகையிற் குறிப்பிட்டார். பண்டிதர் இ. நவரத்தினக்குருக்கள் தலைமை வகித்தார்.

செல்வன் எஸ். பஞ்சலிங்கத்தின் பக்திப் பாடல்களும் விழாவில் இடம் பெற்றன.

# ''யாழ். மாநகரசபைதேர்தல் விரைவில் நடைபெறும்''

### — ஸ்தலஸ்தாபன மந்திரி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தல் விரைவில் நடைபெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேர்தலை விரைவில் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுமென்றும், இது சம்பந்தமாக தான் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாகவும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை விவாதம் முடிவடைந்ததும் யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தல் சம்பந்தமாக, பிரதமருடன், ஸ்தலஸ்தாபன மந்திரி பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

விசேஷ கமிஷனர்கள் மாநகரசபையின் முதலாவது ஆண்டு அறிக்கையை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளனரென்றும். தேர்தல் நடத்துவதை இனியும் தாமதிக்கக் கூடாதென ஸ்தலஸ்தாபன மந்திரி கருதுவதாகவும், ஸ்தலஸ்தாபன அமைச்சு வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது. [அ. நி.]

## குருபூசை

உடுவில், வியாழன்

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை மாணவர்கள் மாணிக்கவாசகர் குருபூசையை மேற்படி பாடசாலையில் சிறப்பாகக்கொண்டாடினர். பாடசாலை அதிபர் திரு. வ. நடராசா தலைமையில் நடந்த இவ்விழாவில் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறை, புதன்

செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் மாணிக்கவாசக குருபூசை கொண்டாடப்பட்டது. மு மயில்வாகனம் சுவாமியாரால் அடியார்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

**சித்தங்கேணியில்**

சங்கானை, புதன்

சித்தன்கேணி கணேசவித்தியாசாலையினர்மணிவாசகர் தினத்தைக் கொண்டாடினர். பிரசாதமும் வழங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

**சங்கானையில்**

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் பண்டிதர் க. மயில்வாகனம், ஆசிரியர் எஸ். இராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

## 'திருவாசகம் நல்வழிப்படுத்துகிறது'

உடுவில், வெள்ளி

''மக்களினுடைய உடல் நோய்களை நீக்க வைத்தியர்கள் எவ்வாறு மருந்து கொடுக்கிறார்களோ அது போலவே பிறவிநோயை தீர்த்துக்கொள்ள சமயப் பெரியார்கள் பல மருந்துகளை தந்துள்ளார்கள் அவற்றில் ஒன்றுதான் திருவாசகம். எந்தப் பொருட்களையும் கெட்டு விடாது பாதுகாக்கும் வலிமை தேனுக்கு உண்டு. திருவாசகம் ஆன்மாக்களை தீயவழிகளில் செல்லவிடாமல் தடுத்து நிறுத்துகின்றது. அதற்காகத்தான் அதற்கு 'தேன்' என்னும் உயர்மொழியை கொடுத்துள்ளார்கள்''

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பப்பாடசாலையின் சைவமன்ற ஆதரவில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூசை விழாவில் கலந்து கொண்ட வண்ணை. காமாட்சி கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ டாக்டர் கா. கு. சிவசுப்பிரமணியக்குருக்கள் மேற்கண்டவாறு கூறினார்

திருவாளர்கள் கா. பரமநாதன், செல்வன் நந்தலால் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## சேமலாப பணம்
### மந்திரிக்கு எம். பி. கடிதம்

யாழ்ப்பாணம், சனி

சேமலாபநிதி பணத்தை யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளில் கட்டுவதற்கும், சேமலாபநிதி சம்பந்தப்பட்ட வழக்குகளை யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தொழில் மந்திரி எம். எச். முகமத்திற்கு யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

தற்பொழுது சேமலாபநிதி கொழும்பிலுள்ள மத்திய வங்கியில் மட்டும் கட்டப்பட்டுவருகிறது. சேமலாபநிதி சம்பந்தப்பட்ட வழக்குகளும் கொழும்பில் தான் விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று திரு. பொன்னம்பலம், தொழில் மந்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில், சேமலாபநிதியை மக்கள் வங்கிகளிலும், இலங்கை வங்கிக் கிளைகளிலும் கட்டவும், வழக்குகளை அந்தந்த மாகாணங்களில் விசாரணை செய்யவும் 58-ம் ஆண்டு சேமலாபநிதிச் சட்டத்தை திருத்தம் செய்யும்படி கேட்டுள்ளார்.

தற்பொழுது சுருட்டு முதலாளிமார் பலர் சேமலாபநிதிக்குப் பணம் கட்டாமலிருக்கிறார்களென்றும், இவர்கள் பணத்தை சுலபமாகக்கட்டக்கூடிய விதத்தில் அந்தந்த மாகாணங்களிலுள்ள வங்கிகளில் பணம் கட்ட வசதி செய்யும்படியும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. [அ. நி.]

## உணவு உற்பத்தி மேற்பார்வைசபை
### அங்குரார்ப்பணம்

குரும்பசிட்டி, வெள்ளி

வலி. வடக்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு. ப. எஸ். பற்றிக்ஸ் தலைமையில் குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் உணவு உற்பத்தி மேற்பார்வைச்சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் சபை நிர்வாக உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. தா. இளையதம்பி, உபதலைவர்- திரு. சி. வன்னியசிங்கம், இணைக் காரியதரிசிகள்- திரு. வி. முருகையா, [கிராம சேவையாளர்], திரு. வ. நடராசா.

4 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்

பூநகரி, வெள்ளி

பூநகரி செட்டிய குறிச்சியில் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு. ரி. அம்பலவாணர் பூநகரி வேரவிலுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

## நாட்டிலும நகரிலும்

'கீரிமலை ஷேத்திரத்தின் பெருமை' என்று நாற்பது வருடங்களுக்கு முன்பு எஸ். வி. சுப்பையா பாகவதர் பாடியதில் அந்த 'பெருமை' என்ற சொல்லை 'சிறுமை' என்று மாற்றிவிடலாமோ என்பதற்கு சான்றாக அங்கே நாள்தோறும் மிகக் கேவலமான சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

சமீப காலங்களில் கீரிமலைக்கு வந்து குளித்துக் கொண்டாடும் பாடசாலை மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதாம். இவர்கள் குளித்துக் கொண்டாடிவிட்டுப் போவதில் ஒருவித ஆட்சேபமும் இல்லை. ஆனல் அவர்கள் குடித்து கும்மாளம் செய்யும்போது தான்சங்கடம்உண்டாகிறது

கீரிமலை ஓர் உல்லாச நிலையம் மட்டுமல்ல. அது ஒரு புனித ஸ்தலமும் ஆகும். அங்கே தினமும் பல அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். தவிர நகுலகிரி சிவனை தரிசிப்பதற்கு பலர் வருவார்கள். உள்ளூரிலிருந்தும் பிற ஊர்களிலிருந்தும் பெண்மணிகள் பலர் அந்த தூயநீரில் ஜலக்கிரீடை செய்ய வருவார்கள்.

இவர்கள் எல்லோருக்கும் பாடசாலை மாணவர்களினதும் மற்றும் இளம் மட்டங்களினதும் குரங்கு சேஷ்டைகள் மிகவும் தொந்தரவு தருவதாயிருக்கிறது.

சென்ற 13-ந் திகதி மாலையில் அங்கே நல்ல 'கலையில்' வந்த இரண்டு கோஷ்டிகளுக்கிடையில் சண்டை மூண்டுவிட்டதாம். ஒருவராலும் அதை சமாதானப் படுத்த முடியவில்லை.

கேணிப் பாதுகாவலர் தன்னந்தனியனாக என்ன செய்ய முடியுல்?

முன்பு சிறிது காலம் தெல்லிப்பளை கிராமசபையின் உத்தரவின் பேரில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து இரண்டு பொலிஸ்காரர் ஒவ்வொரு நாளும் கீரிமலையில் காவல் செய்து வந்தார்கள். பின்னர் என்ன காரணத்தினலோ இந்த நல்ல வழக்கம் கைவிடப்பட்டுவிட்டது.

கேணிப் பாதுகாவலர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார். வர வர அதிகரித்துக் கொண்டு வரும் குளிப்பவர்களையும் அவர்களுடைய சேஷ்டைகளையும் அடக்கி அங்கே ஒருவிதமான ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இவர் ஒருவரால் முடியாது.

கீரிமலை, சேந்தாங்குளம், காங்கேசன்துறை, திருவடிநிலை கடற்கரையோரங்களில் உல்லாசப்பிரயாணிகள் வந்து நின்று தங்கிப் போவதற்கு அருமையான இடங்கள்.

இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உள்ளூர் அரசாட்சிமன்றங்களிடம் போதிய பணவசதி இல்லை. ஆகையால் இந்த விஷயத்தில் மத்தியஅரசாங்கம் தலைபோட்டு இவ்விடங்களை அபிவிருத்திசெய்யவேண்டும்.

அதற்கு முன்பு, இலங்கையிலுள்ளனர்கள் வந்து நின்று குளித்து இளைப்பாறிப் போகும் கீரிமலையில் பொதுமக்களுக்கு தக்க பாதுகாப்பும் வசதிகளும் அளிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு உல்லாசப் பிரயாணிகள் நிலையம் கீரிமலை. அதை அபிவிருத்தி செய்து நல்ல நிலைமையில் வைக்காவிட்டால் அங்கு வருகிறவர்களின் தொகை குறைந்துவிடும். காடைத்தனம், மதுபோதையில்கும்மாளம் முதலியவற்றை நிற்பாட்டுவதற்கு உடனடியாக உள்ளூர் அரசாட்சி மன்றங்கள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். — வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு அரபு நாட்டுத்தலைவர் கெயிரோவில் உச்சி மாநாடு

## அல்ஜீரியாவும் சிரியாவும் பலாத்காரத்துக்கு ஆதரவு

### நாஸர் விருப்பம் வேறு

கெய்ரோ, ஜூலை 14

நான்கு அரபு நாடுகளின் தலைவர்கள் மேற்கு ஆசியா பற்றிய தமது பேச்சுவார்த்தைகளை இங்கு இன்று தொடர்ந்து நடாத்தினர்.

ஐ. அ. குடியரசுத் தலைவர் நாஸர், சிரியா ஜனாதிபதி அட்டாஸி, அல்ஜீரிய ஜனாதிபதி பூமேடியான், ஈராக் ஜனாதிபதி ஆரீப் ஆகியோரே அந்தநான்குதலைவர்களாவர்.

சூடான் பிரதமர் இன்று இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள இங்கு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அல்ஜீரிய எதிர்ப்பு**

இஸ்ரேலுடன் போர் முனையில் சந்திக்காத அரபு நாட்டுத் தலைவர்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு அல்ஜீரியா எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

**பலாத்காரம்**

அல்ஜீரிய ஜனாதிபதி பூமேடியானும், சிரியா ஜனாதிபதி அட்டாஸியும் மேற்குஆசியப்போரில் அரபு நாடுகள் இழந்த பிரதேசங்களை இஸ்ரேலிடமிருந்து பலாத்காரம் மூலமாகத் திருப்பிப்பெறவேண்டுமெனக் கருத்து வெளியிட்டனர்.

**நாஸர் யோசனை**

ஆனால், ஐ. அ. கு. ஜனாதிபதி நாஸர் இதை விரும்பவில்லை. எவ்வித பலாத்கார நடவடிக்கையிலும் இறங்க முன்னர், அரபு இராணுவத்தைப் புதிதாகப் பலப்படுத்த வேண்டுமென்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# சூயஸ் கால்வாயில் புதிய சம்பவம்

## ஐ. அ. கு. துருப்புகள் சுட்டதாக அறிவிப்பு

டெல் அவில், ஜூலை 14

சூயஸ் கால்வாயில் ஒரு புதிய சம்பவம் நிகழ்ந்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கால்வாயின் மேற்குக்கரையிலிருந்து ஐ. அ. குடியரசுத் துருப்புகள் இஸ்ரேல் துருப்புக்கள் மீது சில நிமிடங்களாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இஸ்ரேலிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஆட்சேதம் எதுவுமில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால் இச்சம்பவம் பற்றி கெய்ரோவிலிருந்து எச்செய்தியும் கிடைக்கவில்லை.

# ஐ. நா. பொதுச் சபையில் பல நாடுகள் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவித்தன

## பழைய ஜெருசலத்தை இணைப்பது ஐ. நா. வுக்கு சவால் என கருத்து

நியுயோர்க், ஜூலை 14

**நேற்று இங்கு நடைபெற்ற ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில், பல நாடுகள் இஸ்ரேல், பழைய ஜெருசலம் நகரைக் கைப்பற்றியதற்கு ஆட்சேபம் தெரிவித்தன.**

இஸ்ரேலின் நடவடிக்கை ஐ. நா. சாஸனத்திற்கும், சர்வதேசச் சட்டத்திற்கும் முரணானது எனச் செக்கோஸ்லேவாக்கியப் பிரதிநிதி கூறினார்.

**சவாலாகும்**

பழைய ஜெருசலத்தைத் தன்னுடன் இணைக்கும் இஸ்ரேலின் நடவடிக்கையானது, ஐ. நா. சபைத் தீர்மானத்துக்குச் சவால் விடுவதாகும் என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேலிடமிருந்து ஜெருஸலத்தை மீட்க ஐ. நா. பந்தோபஸ்து சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற பாகிஸ்தான் தீர்மானத்தை செக்கோஸ்லேவாக்கியா ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல், ஐ. நா. சபையின் தீர்மானங்களைத் தொடர்ந்து உதாசீனம் செய்துவருவதாகக் குவெயித் பிரதிநிதி குற்றஞ்சாட்டினார்.

**போலாந்துப் பிரதிநிதி**

மேற்கு ஆசியாவில் சமாதானம் நிலவுவதற்கு முதற்படியாக இஸ்ரேல் அரபுப் பிராந்தியங்களிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ் பெறவேண்டும் என்று போலாந்து தூதுவர் சபையில் தெரிவித்தார்.

சியோனிஸ்டுகள் மதத்தை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாகச் சிரியாப் பிரதிநிதி கூறினார்.

**பாகிஸ்தான் மறுப்பு**

பாகிஸ்தான் தீர்மானம், மதத் துவேஷம் பொருந்தியது என்ற இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபானின் குற்றச்சாட்டைப் பாகிஸ்தான் பிரதிநிதி மறுத்தார்.

இக்கட்டத்தில், சபை இன்றிரவுவரை ஒத்திவைக்கப்பட்டது.

## ரஷ்ய தலைவர்கள் மாஸ்கோ திரும்பினர்

மாஸ்கோ, ஜூலை 14

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி பிரெஷ்னெவ்வும், சோவியத் பிரதமர் கொஸிஜினும் புடாபெஸ்டிலிருந்து நேற்று மாஸ்கோ திரும்பினர்.

அவர்கள், மேற்கு ஆசிய விவகாரம்பற்றிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக புடாபெஸ்ட் சென்றிருந்தனர்.

## கெயிரோவில் ஜெனரல் புல்

கெயிரோ, ஜூலை, 14

ஐ. நா. சமாதானக் கமிஷனின் தலைவரான ஜெனரல் புல், டெல் அவிவில் தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு கெய்ரோ வந்து சேர்ந்தார்.

ஐ. அ. குடியரசில் நிறுத்தப்படும் ஐ. நா. பார்வையாளர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகளிட்டு அவர்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்.

ஐ. நா. பார்வையாளர்கள் கோஷ்டியில் இடம் பெறும் நாடுகளாக அவர் பிரேரித்த சுவீடன், பின்லாந்து, பர்மா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பெயர்களை ஐ. அ. குடியரசு அங்கீகரித்துள்ளது.

## அல்ஜீரியாவில் பூகம்பம்

### 9 பேர் பலி

அல்ஜியர்ஸ், ஜூலை 14

அல்ஜீரியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 9 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புயல் வீசி 16 பேர் மரணம்

டைபேஸ், ஜூலை 14

மத்திய போர்மோஸா [illegible] புயலில் 16 பேர் [illegible] னர்.

# மேற்கு ஜெர்மனியிலிருந்து டி கோல் பாரிஸ்திரும்பினர்

## பல விஷயங்களை விவாதித்தார்

பாரிஸ், ஜூலை 14

பிரேஞ்சு ஜனாதிபதி டிகோல், பொன்னிலிருந்து நேற்றுப் பாரிஸ் திரும்பினார்.

அவர் தமது வழமையான விஜயமொன்றில் மேற்கு ஜெர்மனி சென்றிருந்தார்.

**ஒற்றுமை வேண்டும்**

ஐரோப்பாவில் அமெரிக்க ஆதிக்கத்தைத் தடை செய்வதானால், மேற்கு ஜெர்மனியும் பிரான்சும் ஒன்றாக இயங்கவேண்டுமென்று டிகோல் அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

பிரான்சும், மேற்கு ஜெர்மனியும் தனித்தனியாக இயங்கினால் அது ஐரோப்பாவில் அமெரிக்க ஆதிக்கத்துக்கே வழி வகுக்குமென டிகோல் கருத்துத் தெரிவித்தார்.

தமக்கு அமெரிக்கா மீது பொறாமையோ, துவேஷமோ கிடையாதெனவும், ஐரோப்பாவிலுள்ள தற்போதைய நிலைமையில் அமெரிக்கா அதிக சக்தி வாய்ந்த நாடாக இருப்பதே தமது கருத்துக்குக் காரணமாகுமெனவும் அவர் தெரிவித்தாராம்.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் பங்கு பற்றுவது பற்றியும் டிகோல் மேற்கு ஜெர்மன் தலைவர்களுடன் விவாதித்தார்.

**அபிப்பிராய பேதம்**

பிரிட்டன் தனது வாழ்க்கையை மேலும் ஐரோப்பிய பாணியில் அமைத்துக் கொள்ள வேண்டுமெனவும், அதன் பின் தான் அது ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்க்கப்படுவது பற்றி முடிவு செய்யலாமெனவும் டிகோல் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஐரோப்பியபொதுச்சந்தையில் பிரிட்டனை அனுமதிப்பது சம்பந்தமாக மேற்கு ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே அபிப்பிராய பேதம் இருப்பது இப்பேச்சுவார்த்தைகளின் போது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இதற்கிடையில் நேற்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பேசிய பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், பிரிட்டனையிட்டுப் பொய்யுரைகளைக் கூறிவருவதாகப் பிரெஞ்சு வெளியுறவு மந்திரி மீது குற்றஞ்சாட்டினார்.

## 23 பொலிஸார் கலக நாகரால் கொல்லப்பட்டனர்

நாகலாந்து, ஜூலை 14

நாகர்களின் வலையில் சிக்குண்ட இந்திய மத்திய ரிசேர்வ் பொலிசார் 23 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய ஆயுதங்களும் நாகர்களால் பறிமுதல் செய்யப்பட்டன.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்துக்குப் பலமான இராணுவப் பிரிவு ஒன்று விரைவாக அனுப்பி வைக்கப்பட்டது.

கொங்கோ

## கிஷென்ஷாவிற்கு 100 பேர்

பிரசவில், ஜூலை 14

கிஸெங்கானியில்கலகக்காரரினால் பிணையில் வைக்கப்பட்டிருந்த சிவிலியன் மக்களில் 100 பேரை செஞ்சிலுவைச் சங்க விமானங்கள், கிஷென்ஷாவிற்குக்கொண்டு போய்ச் சேர்த்துள்ளன.

இச்சிவிலியன்களில் ஐரோப்பியர்களும், காயமுற்ற கொங்கோப் போர் வீரரும் இருந்தனர்.

## வியட்னாமுக்கு அதிக துருப்புகள்

### ஜோன்ஸன் முடிவு

வாஷிங்டன், ஜூலை 14

வியட்னாமுக்கு மேலதிகமாக அமெரிக்கத் துருப்புகள் அனுப்புவதென அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் தீர்மானித்துள்ளார்.

ஆனால் அனுப்பபடவிருக்கும் துருப்புகளின் எண்ணிக்கையை அவர் குறிப்பிடவில்லை.

## பிரியாவிடை

யாழ்ப்பாணம், வெள்ளி

இ. போ. ச. யாழ்ப்பாணம் மேற்கு டிப்போவில் சுப்பிரிண்டனாக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று கொழும்பு மத்திய டிப்போவுக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. செல்வரத்தினத்துக்கு நேற்று முன்தினம் யாழ். மாநகரசபை மண்டபத்தில் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. யாழ். மேற்கு டிப்போவைச் சேர்ந்த பல்வேறு தொழிற்சங்கங்களிலும் அங்கம் வகிக்கும் ஊழியர்கள் பிரஸ்தாப வைபவத்தை நடத்தினர்.

திரு. செல்வரத்தினத்தின் சேவையைப் பாராட்டித் தங்கப்பவுண்கள், தங்க ஆபரணங்கள் முதலியன அன்பளிப்புச் செய்யப்பட்டன.

## பஸ் விபத்தில் 7 பேர் பலி

சிம்லா, ஜூலை 14

சிம்லாவுக்கருகில் நேற்று நடைபெற்ற பஸ் விபத்தொன்றில் 7 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 19 பேர் காயத்துக்குள்ளாயினர் மொத்தம் 30 பிரயாணிகளைக் கொண்டு சிம்லா சென்றுகொண்டிருந்த இப்பஸ் வழியில் விபத்துக்குள்ளாகியது.

கல்கத்தா

# டிராம்வே கம்பனி பற்றி பேச்சுவார்த்தை

கல்கத்தா, ஜூலை 14

கல்கத்தாவிலுள்ள பிரிட்டிஷ் உதவி ஹைமிஷனர், நேற்று மேற்கு வங்காள உதவிப் பிரதமர் திரு. ஜோதி பாசுவைச் சந்தித்து பேசினார்.

கல்கத்தா பிரிட்டிஷ் டிராம்வேயை மேற்கு வங்காள அரசாங்கம் மூன்று வருட காலத்துக்கு எடுத்து நடாத்த முடிவுசெய்திருப்பது பற்றியே பிரிட்டிஷ் உதவி ஹைகமிஷனர் திரு. ஜோதிபாசுவுடன் பேசினார்.

**பாதிக்கப்படும்**

அவர், திரு. ஜோதி பாசுவிடம் அளித்த குறிப்பொன்றில், மேற்கு வங்காளத்தில் பிரிட்டிஷ் பண முடக்கல் இம்முடிவினால் பொதுவாகப் பாதிக்கப்படுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டிராம்வேயை மேற்கு வங்காள அரசாங்கம் தற்காலிகமாகவே இப்போது எடுத்துள்ளதாகவும், இது சம்பந்தமானவிபரங்களையாவும் சமர்ப்பிக்கப்பட்டால், பிரிட்டனிலுள்ள ஜனநாயக அபிப்பிராயம் உண்மையை விளங்கிக்கொள்ளும் என திரு. ஜோதிபாசு கூறியுள்ளார்.

**பின்னர் ஆலோசிக்கும்**

மூன்று வருடங்களுக்குப் பின்னருள்ள நிலைமையில் தான், டிராம்வே கம்பனியை முற்றாகப் பொறுப்பேற்பது பற்றி மேற்கு வங்காள அரசாங்கம் ஆலோசிக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காரைநகர் பிரயாணிகள்

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் பிரயாணிகள் நேற்று முன் தினம் மாலை யாழ். பஸ் நிலையத்தில் வெகு நேரம் பஸ் இல்லாமல் காத்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டதாம். ஓட வேண்டிய மூன்று பஸ்க[illegible] வீடுபடாததே இதற்கு[?] காரணமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை நிறுத்தம்

காங்கேசன்துறை, வெள்ளி

சுன்னாகம் பட்டினசபை நகர சுத்தித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

நகர சுத்தித்தொழிலாளர் ஒருவரை சுன்னாகம் பட்டின சபைத்தலைவர் தற்காலிகமாகவேலைநீக்கம்செய்ததை ஆட்சேபித்து இந்த வேலை நிறுத்தம்நடக்கிறது.

## பருத்தித்துறையில் கலைவிழா

இமையாணன், வெள்ளி

பருத்தித்துறை வட்டார பாடசாலைகளின் கலை விழா ஒன்று இன்றுபருத்தித்துறை மெதடிஸ்த மகளிர்கல்லூரியில்நடை பெறவிருக்கிறது. பாட்டு, கிராமிய நடனம், கீழைத்தேசநடனம், நாடகம் முதலிய பல கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும் இவ் விழாவுக்கு பருத்தித்துறை எம். பி. க. துரைரத்தினம் தலைமை தாங்குவார்.

## இடமாற்றம

வல்வெட்டித்துறை, வெள்ளி

இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையின் பிரதம லிகிதரான திரு. ஜி. சிவபாலன் வவனியா வங்கிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

## "சமயகுரவர் வழியை பின்பற்ற வேண்டும்"

### குருபூசையில் வடமாநில வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், சனி

'சைவசமயத்தை எங்கும் வளரச்செய்த பெரியார்கள் சமயகுரவர்களாவர். இவர்கள் எமக்குக் காட்டிய நெறிகள் இன்னும் நிலைபெற்று விளங்குகின்றன. நமக்கு ஆன்ம ஈடேற்றத்தைக் கொடுக்கும் இவர்கள் காட்டிய நல்வழியை நாமும் கடைப்பிடித்தல் அவசியமாகும்.' என வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற மாணிக்கவர்சகர் குருபூசை விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசிய வடமாநில வித்தியாதிபதி திருமதி இரத்தின நவரத்தினம் குறிப்பிட்டுப்பேசினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம் கற்றோர்மனத்தை உருக்கச் செய்யும் என்றும், இறைவன் தன்மைகளை இலகுவாக நாம் நாம் அறிந்து கொள்ளும்வண்ணம் திருச்சதகம், திருச்சாழல் திருக்கோத்தும்பி, திருப்பொற்சுண்ணம் சிவபுராணம் ஆதியன விளங்குவதாகவும் சைவமக்கள் பெரியார்களின் முத்திபெற்ற தினத்தைக் கொண்டாடுவதோடு மட்டும் நில்லாது அப்பெரியார்கள் காட்டிய நெறியைப் பின்பற்றி வாழவேண்டும் என்றும்சொன்னர்.

திரு. சி. உ., சோமசேகரமும் உரையாற்றினர்,

பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா, திரு. சி. கார்த்திகேசு ஆகியோர் புராண படன நிகழ்ச்சிகளை நடத்தினர்.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி வருகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு
1967 ஜூலை 20-ந் திகதி 151-வது சீட்டிழுப்பு டெடிகமையில்நடைபெறும்

1-வது பரிசு ரூ. 100,000 அல்லது புத்தம் புதிய ஒப்பெல் ரெக்கார்ட் ஸ்டேசன் வாகனும் ரூ. 78,400/-ம் X



2-வது பரிசு ரூ. 40 000 அல்லது புத்தம் புதிய ஒப்பெல் கடெற் காரும் ரூபா. 25,575/-ம்X



3-வது பரிசு ரூ. 10,000 அல்லது புத்தம் புதிய ட்ராக்டர் (மெஸர்ஸ் சத்தியாவதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரான்போட்டர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன்) கம்பெனி பட்டியல் விலை ரூ. 14,000/- வாகிய இந்த ட்ராக்டர் விசேஷமாக குறைக்கப்பட்ட விலை ரூ. 10,000/-க்கு வழங்கப்படுகின்றது.



X இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைக்கு குறைந்ததாகும்:

100 ஆறுதல் பரிசுகள்:

கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ 1298/80 பரிசு பெறுகிறார்கள்.

இந்தக் கார்களையும், ட்ராக்டர்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்கு பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.



"ராணே"

உங்கள் சொகுசுக்கேற்ற சாமான்கள்

O ஸ்பிரிங் கட்டில், பிரேம்கள், எல்லா அளவிலும்



O டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
O டிலைட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
O ஆஸ்பத்திரி கட்டில்கள்
O டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
O ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
O பஞ்சு - தும்புமெத்தைகள்
O ஸ்பிரிங் மெத்தைகள்
O குழந்தை தொட்டில்
O மெத்தை ஸ்பிரிங்குகள்
O திரைகள்
O சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,
62, புளூமெண்டால் ரோட்,
கொழும்பு-13.

தொலைபேசி: 2233/34


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

**வலி-கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்**
**நீர்வேலி**

ஷெ சமாசத்தில் கீழ்க்காணும் அளவுகளுடைய புதிய ரயர்கள் விற்பனைக்கிருக்கின்றன.

520X14 - 4 560X15 - 4
750X20 - 12

இவற்றை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் பெமிற்றுடன் பெற்றுக்கொள்ளலாம்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்.

நீர்வேலி,
12-7-67. 12

## வலி வடக்கு விளையாட்டு விழா

குரும்பசிட்டி, வெள்ளி

வலிகாமம் வடக்கு தேசிய அரசாங்க விளையாட்டுப் பகுதியினர் நடாத்தும் முதலாவது விளையாட்டு விழா இம்மாதம் 28-ம் திகதி முதல் ஆவணி 27-ந் திகதி வரை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன. மாட்டுவண்டிச்சவாரி. உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், தாச்சிச் சுற்றுப்போட்டி, 16 மைல் மரதன் ஓட்டம், 16 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் பல்வேறு உடற்பயிற்சிப்போட்டிகளும் இவ் விளையாட்டு விழாவில் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பல விலையுயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும். வலி. வடக்குப் பிரிவைச் சேர்ந்த சுமார் 50 சனசமூகநிலையம், கிராமமுன்னேற்றச்சங்கம், விளையாட்டுக்கழகம் போன்றன இவற்றில் கலந்துகொள்ளவிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுக் கிராமசேவையாளர்கள் மூலமாகப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். இவ் விளையாட்டுவிழாவைச் சிறப்பாக நடாத்த வலி. வடக்கு விளையாட்டுப் போதனாசிரியர்கள் திருவாளர்கள் ரி. முருகையா, எஸ். கந்தசாமி ஆகியோர் வேண்டிய ஒழுங்குகளைக் கவனித்துவருகின்றனர்.

நல்லூர்

## ஆசிரிய மாணவரின் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இல்ல மெய் வல்லுநர் போட்டி கலாசாலை மைதானத்தில் கலாசாலை அதிபர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வெள்ளை இல்லம் முதலிடத்தையும், நீல இல்லம் இரண்டாம் இடத்தையும், மஞ்சள் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. திரு. பி. ஜே. ஸ்ரனிஸ்லோஸ் சாம்பியனுத் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த வீரர்களாக திரு. இ. சின்னப்பாவும், திரு. பொ. சபாபதியும் திரு. எஸ். யோசேப்பும் தெரிவானார்கள்.

## இளம் பெண் மரணம்

### தீர்ப்பு ஒத்திவைப்பு

சங்கானை, வெள்ளி

இளம் பெண் துடி துடித்து மரணமானார். அராலி தெற்கு கொட்டைக்காட்டைச் சேர்ந்த சிவநாயகி தம்பிராசா என்ற பெண் துடிதுடித்து அவஸ்தைப் படுவதைக்கண்டு கொட்டைக்காடு அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடாத்தினார். டாக்டர் எஸ். குலத்துங்கம் பிரேதபரிசோதனை நடாத்தினார். குடலில் இருந்து நச்சுத்திராவகம் அரசாங்க ரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

தீர்ப்பை மரணவிசாரணை அதிகாரி ஒத்திவைத்தார்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி கணேசன்
நடித்த
பூங்கோதை
புதிய கொப்பி


## கூட்டுறவு விழா போட்டி முடிவுகள்

சங்கானை, வெள்ளி

சங்கானையில் நடைபெற்ற சர்வதேசக் கூட்டுறவு விழாவில் இடம் பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

சயிக்கிள் ஓட்டப்போட்டி- கே. நித்தியானந்தன், ஆனைக்கோட்டை, அ. நாகேசன், ஆனைக்கோட்டை, சி. பரமேஸ்வரன் சுழிபுரம்.

மாணவிகள் கூட்டுப்பாடல்- விக்ரோறியாக்கல்லூரி, பண்ணாகம் வடக்கு அ. மி. பாடசாலை, சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை, மாணவர் கூட்டுப்பாடல்- சண்டிலிப்பாய் வடக்கு த. க. வித்தியாசாலை, விக்ரோறியா கல்லூரி, சிற்றம்பலம் வித்தியாசாலை. சாந்தை.

மாணவிகள் தனிப்பாடல்- க. தேவகன்னி, பண்ணாகம் வடக்கு அ. மி. பாடசாலை, வை. மகேஸ்வரி. வாணி நிகேதன வித்தியாசாலை, சண்டிருப்பாய், க. பரமேஸ்வரி. முருகமூர்த்தி வித்தியாசாலை.

மாணவர் தனிப்பாடல்- எஸ். கே, சிவபாலன், விக்ரோறியாக் கல்லூரி.

மாணவர் பேச்சுப் போட்டி - சிரேஷ்ட பிரிவு- சிவபாலகிருஷ்ணன், சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி, இ. ஈஸ்வரநேசன், விக்ரோறியா, சி. சந்திரலிங்கம், நவாலி மகாவித்தியாலயம். கனிஷ்ட பிரிவு- தா. அ. இளமுருகன், விக்ரோறியா, க. செந்தில்நாதன் விக்ரோறியா, ந. சிவசுப்பிரமணியம், சிற்றம்பலம வித்தியாசாலை.

மாணவிகள் பேச்சு போட்டி - சிரேஷ்டபிரிவு- சு. பூமாதேவி, விக்ரோறியா, செ. சிவயோகநாயகி, விக்ரோறியா, ந. சுந்தராம்பாள், மெய்கண்டான் பாடசாலை. கனிஷ்ட பிரிவு-சி. இராசேஸ்வரி. ஆறுமுகவித்தியாசாலை, சுழிபுரம், நி. நிமலாநயகி, வட்டு இந்துக்கல்லூரி, சி. சகுந்தலை, விக்ரோறியாக் மா. வா, மா, சித்தன்கேணி த. க. பாடசாலை.

கூட்டுறவுச் சங்கங்களின் திறமைப் போட்டி- வட்டுக்கோட்டை ப. நோ. கூ. சங்கம், சித்தன் கேணி ப. நோ. கூ. சங்கம், சங்கானைகிழக்கு ப. நோ. கூ. சங்கம்.

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி புதிய மண்டபத்தை பண்டிதர் இராசையா திறந்துவைத்தார். ஆசிரியர் வித்துவான் கா. கி. நடராசன் பாடசாலை வளர்ச்சி பற்றி வாழ்த்துப்பாடி ஆசிரியரிடம் கையளித்தார். மாணவிகளின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
Daily 10-30, 4-45,
7-00-9-45
SON OF
CAPTAIN BLOOD

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
சுனில்தத்-சரோஜாதேவி
நடித்த
பேரி—பேரி
[Beti-Beti]
ஹிந்தி

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Shirley Maclaine
Paul Newman
in
What a Way
To Go!


## வரிவிளம்பரம

### நன்றி நவிலல்

காலம் சென்ற திருமதி செல்லம்மா அரியநாயகத்தின் இறுதிச்சடங்கின்போது சமூகம் தந்தும் உதவி புரிந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்குகொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவிக்கிறோம். தனிப்பட்ட முறையில் நன்றி நவில இயலாமைக்கு வருந்துகிறோம்.

இங்ஙனம், தெய்வேந்திரம், சுப்பிரமணியம், குகனேஸ்வர், சிவராசா, மனோரஞ்சிதம். அம்பலவானர், பத்மதேவி, ராஜேந்திரம், பராசக்தி. இந்திர வாசா, உரும்பராய். 2422

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர் சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

மனேஜர்

யாழ். ஆஸ்பத்திரி கூட்டுறவு நல விருத்திச் சங்கக் கன்ரீனுக்கு ஒரு மனேஜர் தேவை. வயது: 25—45, காசு 1000/, ஆதனம் 1000/ சம்பளம் ஒரு தேநீர் தயாரிப்பவர், சாப்பாடு பரிமாறுபவர், மனேஜர் உட்பட 225/. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் விசேஷமாகக் கவனிக்கப்படுவர். கடமையில் சேர்ந்து 6 மாசத்தின் பின்னர் நிரந்தரமாகக் கருதப்படும். 24-7-67 நண்பகல் 12 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். காரியதரிசி. 2415

### கல்வி

வகுப்புகள்:

தபால் தந்தியாளர், எழுதுவினைஞர் பரீட்சைகள், ஆறு மாத சுருக்கெழுத்து, ஆங்கிலம், தமிழ், வகுப்புக்கள், 45 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் நடாத்தப்படுகின்றன. விண்ணப்பிக்கவும்: வர்த்தகக் கல்லூரி, நீதவான் வீதி, பருத்தித்துறை. 2419

வகுப்புகள்:

இரசாயனம், பௌதிகவியல், தூயகணிதம், உயர் கணிதம், பிரயோககணிதம், ஆங்கிலம், அனுபவம் வாய்ந்த இலங்கைப் பட்டதாரிகளால் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்காக மாலையிலும், மற்றவர்களுக்காகக் காலையிலும் நடாத்தப்படுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, நெல்லியடி. கரவெட்டி. 2418

வகுப்புகள்:

வர்த்தகம். கலை, விஞ்ஞானம், சிங்களம், தையல் 45 வருட அனுபவமுள்ள இலங்கை, லண்டன், பட்டதாரிகளாலும், காலை, மாலை வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. விடுதி வசதிகளுண்டு. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, ஸ்தாபிதம் 1924. ஆண் பாடசாலை, நீதவான் வீதி, பருத்தித்துறை. வாகையடி, உடுப்பிட்டி, நெல்லியடி, கரவெட்டி, பெண் பாடசாலை நீதிஸ்தல வீதி பருத்தித்துறை, மெயின் வீதி, உடுப்பிட்டி. 2420

### தேவை

விற்பனையாளர்கள்:

விற்பனை செய்வதற்குப் பெண்கள் தேவை. தகுந்த சம்பளமும் கொமிஷனும் கொடுக்கப்படும். பிணை ரூபா 50/-. ஜெப, ஜெய வாசா, 16, 2-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 2509

## புதிய நிர்வாகிகள்

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

உரும்பராய் வடக்குபைங்கரன் விளையாட்டுக்கழக நடப்புவருட உத்தியோகத்தர்:-

தலைவர் திரு. சோ. குகதாசன், உப தலைவர்கள் திருவாளர்கள் த. ரங்கநாதன், வெ. ரவீந்திரன், செயலாளர் திரு. த. பிளகதீஸ்வரன் பொருளார் திரு. ப. ஜெயராசா, 5 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

பாணுவெட்டி

## ஆஸ்பத்திரிக்கு வார்ட்டுகள்

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் பாணுவெட்டி அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு வார்ட்டுகள் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


கடைசி வாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ண [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ண் [பண்டாரவளை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர், ஜெயலலிதா
நாகேஷ், மனோகர்
மாதவி, சகஸ்ரநாமம்,
பண்டரிபாய், ராமதாஸ்
நடிக்கும்
நீ
இசை: விஸ்வநாதன்
[பாஸ்கள் ரத்து]



ராதா மணிமார்க்
சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சர்வோதயமூலம் தேசியஒற்றுமை நிலை நாட்ட முடியும்'

## அமரர் அரியநாயகம் அஞ்சலி கூட்டத்தில் திரு. ஆரியரத்ன

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன் இன்று மாலை கொழும்பில் இழுக்கப்பட்ட 150-வது தேசிய சுவீப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
11 T 0237 - ரூ. 100,000

இரண்டாவது பரிசு
01 V 0045 - ரூ. 40,000

மூன்றாவது பரிசு
21 Q 0483 - ரூ. 10,000

தலா ரூபா 534-20 பரிசு பெறும் டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 11 L 0694 | 11 Z 0010 |
| 12 S 0274 | 07 J 0676 |
| 05 W 0161 | 30 V 0421 |
| 01 S 0616 | 24 G 0929 |
| 16 N 0076 | 08 Y 0834 |
| 24 K 0961 | 22 M 0192 |
| 10 C 0797 | 38 F 0169 |
| 04 Z 0814 | 03 F 0236 |
| 07 R 0141 | 41 B 0328 |
| 26 M 0112 | 20 B 0148 |
| 39 R 0836 | 14 F 0198 |
| 25 N 0679 | 19 J 0530 |
| 10 V 0326 | 08 G 0357 |
| 18 X 0351 | 14 Y 0197 |
| 23 V 0933 | 30 F 0010 |
| 34 P 0499 | 22 K 0442 |
| 31 A 0509 | 26 K 0292 |
| 32 S 0456 | 18 A 0447 |
| 03 O 0124 | 29 S 0550 |
| 25 Z 0659 | 30 Z 0237 |
| 26 L 0154 | 28 R 0045 |
| 19 S 0736 | 29 B 0291 |
| 10 Z 0202 | 21 D 0615 |
| 02 A 0500 | 33 X 0168 |
| 30 G 0635 | 01 L 0394 |
| 36 H 0291 | 05 N 0127 |
| 12 B 0140 | 33 E 0322 |
| 13 D 0005 | 07 W 0914 |
| 18 C 0100 | 02 L 1000 |
| 11 W 0229 | 17 X 0731 |
| 27 R 0058 | 15 D 0140 |
| 24 K 0220 | 07 R 0161 |
| 16 Y 0154 | 09 A 0337 |
| 24 Q 0073 | 04 U 0869 |
| 04 Q 0215 | 29 K 0980 |
| 30 Z 0796 | 30 E 0034 |
| 14 R 0047 | 16 M 0229 |
| 20 A 0319 | 40 A 0336 |
| 19 Z 0062 | 36 Q 0271 |
| 20 D 0569 | 15 L 0976 |
| 32 L 0043 | 28 M 0800 |
| 14 Z 0852 | 06 C 0902 |
| 16 B 0398 | 25 B 0089 |
| 19 D 0316 | 19 A 0472 |
| 28 Y 0465 | 09 A 0499 |
| 05 E 0556 | 27 E 0364 |
| 14 J 0852 | 03 K 0034 |
| 27 K 0635 | 17 H 0710 |
| 22 P 0856 | 33 K 0740 |
| 27 T 0396 | 31 B 0268 |

[இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை]

## புதியவட்டார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸ் பொது நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

புதிய கமிஷன் முன்னிலையில் தமிழ் காங்கிரஸ் சார்பில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு, தற்போதுள்ள வட்டாரங்களை ஆராய்வதற்காக ஒருகமிட்டி தெரிவு செய்யப் பட்டது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தலுக்கு ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதற்குவட்டாரங்கள்தோறும் கமிட்டிகள் தெரிவு செய்யப் படவேண்டுமென கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

மார்ட்டின் கமிஷன் அறிக்கை அமுல் செய்யப்படாதென்றும், மாநகரசபைத் தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடைபெறுமெனத் தாம் நம்புவதாகவும், திரு. பொன்னம்பலம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

(அ. நி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## யாழ்ப்பாணப் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை ஆதரித்தது. ஆனல் இன்றுவரை அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

### தமிழ் மொழியே போதனு மொழி

யாழ்ப்பாணத்தில் வேண்டிய எல்லா வசதிகளும் இருப்பதால்தான் 'யாழ்ப்பாண பல்கலைக் கழகம்' என்ற பெயரில் அழைக்க நான் விரும்புகிறேன். இங்கு அமைக்கப்படும் பல்கலைக்கழகம் தமிழ்மொழியைத்தான் போதனுமொழியாகக் கொண்டிருக்க வேண்டும்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருத்தமான நாகரீகங்கள், கல்வி முறைகளாய் அந்நாடுகள் முன்னேறுகின்றன. நம்பண்பாடுகளுக்கும் பழமைகளுக்கும் ஒவ்வாத அவர்களின் நாகரீகம், கல்விமுறைகளால் நாம் என்றுமே முன்னேற முடியாது. ஆங்கிலம் அவசியம் படிக்க வேண்டும். ஆனல் ஆங்கிலேயனுக மாறக் கூடாது. ஆங்கிலக் கல்விமூலம் தமிழுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பல்கலைக்கழக சுயமொழிப் போதனை விரைவில் அமுலாகப் போகிறது. அதே நேரத்தில் ஆங்கிலம் பேச, எழுத ஆறுமாதப் பயிற்சி அளிக்கவும் திட்டமிட்டுள்ளனர். பாடசாலையில் ஆங்கிலத்தை திறமையுடன் போதித்தால் பல்கலைக்கழகம் சென்று ஆங்கிலம் படிக்க அவசியமிராது. தமிழ்ப் பிள்ளைகளிடம் வாசிக்கும் மனப்பான்மை குறைந்துவிட்டது. பயனுள்ள நூல்களை மாணவர் ஏராளமாகப் படிக்க வேண்டும்.

பாடசாலை அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தமது ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது:

எமது நாட்டுக் கல்வி முறையில் உள்ள முக்கிய குறைபாடு ஒரேவிதமான கல்வியையே எல்லோருக்கும் புகட்டுவதுதான். இம்முறை மாணவரின் வளர்ச்சிக்குத் தடையாக அமைகிறது. மாணவரை அவரவர் தகுதிக்கேற்ப கணிதம், கலை, நுண்கலை போன்ற பல துறைகளுக்கும் வழிப்படுத்தல் அவசியம். ஆனல் எல்லாத்துறை மாணவருக்கும் சில பொதுப்பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

சிரேஷ்ட கல்வி நிலையங்கள் உயர்ந்த தரமுடையனவாயும், சமதரமுடையனவாயும் அமைய வேண்டும். ஒரு துறைக்கு வழிப்படுத்தப்பட்ட மாணவனிடம் வேருேர் துறைக்கு மாறும் ஆற்றலும், விருப்பும் இருப்பின் மாறிக் கொள்ள அவனுக்கு பூரண உரிமை இருக்க வேண்டும். ஒரே பாடசாலையில் பலதுறைக் கல்வியை அளிப்பதே சிறந்தது. இப்படியான பாடசாலைகளில் பலதுறைக்கல்வி பயிற்றப்படுவதால் பாடசாலைகளுக்கிடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கப்படுவதும் தவிர்க்கப்படும்.

வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

## காரியாதிகாரிகள் இடமாற்றம்

முல்லைத்தீவு. வெள்ளி

முல்லைத்தீவு கரைதுறைப் பற்றுப் பிரிவுக் காரியாதிகாரியாக தற்போது செட்டிகுளத்தில் கடமையாற்றும் திரு. கணேசநாதன் இம்மாதம் 12-ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவுக் காரியாதிகாரியாகச் ... நியமிக்கப்பட்டுள்ளார்.

## நீர்கொழும்பில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தேசிய அரசாங்கம் பதவிக்குவந்தபின்னர் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் இது ஒன்பதாவதாகும். இதுவரை நடந்த இடைத் தேர்தல்களில் ஆறுஸ்தானங்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஒரு ஸ்தானத்தை லங்கா சமசமாஜக்கட்சியும் கைப்பற்றின. வெலிமடை இடைத் தேர்தலில் சுயேட்சை அபேட்சகரான திரு. பேர்ஸிசமரவீரவெற்றி பெற்றுர்.

இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்களும் கிடைத்த வாக்குகள் விபரமும் வருமாறு:—

திரு நிக்கலஸ் டென்ஸில் பெர்னுண்டோ
[ஐ. தே. க.] 18751

டாக்டர் லின்னஸ ஸி திஸநாயக்க
[ஸ்ரீ ல. சு. க] 11463

திரு ஜஸ்டின் பெர்னுண்டோ
[சுயேச்சை[ 1929

திருமதி ஹாஜியா ஹபார் சத்தார்
]சுயேச்சை] 1037

திரு பற்றிக் மிரால்
[சுயேச்சை] 389

திரு. ரியூறின் லபர்னுண்டோ
[சுயேச்சை] 201

மொத்த வாக்குகள்
43.358

அதிகப்பட்ட மொத்த வாக்குகள் 43,770

## ஒன்றுபட்டால் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் ரேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பி. ஏ. பிலிப் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது

''அரசாங்கம் எங்கள் விருப்பத்தைக் கேட்டு பாடசாலைகளைப் பொறுப்பேற்கவில்லை. ஆதலால் கஷ்டநஷ்டங்களை ஏற்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இதுபற்றிக் கல்வி மந்திரியுடன் அடிக்கடி பேசிவருகிருேம். அரசியல் மற்றும் பல காரணங்களால் எங்கள் கோரிக்கைகள் முழு அளவில் நிறைவேருமலிருக்கின்றன. சில்சில பகுதிகளில் நம் கோரிக்கைகள் வெற்றி பெற்றுவருகின்றன.

உங்களில் பலர் 20 வருடங்களாகக் கடமையாற்றியிருக்கின்றீர்கள். ஆதலால் உங்களது சேவை கணிக்கப் படவேண்டும். மொழிச் சட்டத்திற்கு உங்களைப் பொறுத்தவரை விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். எல்லா ஊழியரும் ஒரு சம்பளத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும்.''

அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியர் சங்கக் காரியதரிசி திரு. டபிள்யு. டி. பிரேமரத்தின கூறியதாவது: ''கொழும்பிலும், களுத்துறையிலும், யாழ்ப்பாணத்திலும் தனித்தியங்கி வந்த நமது சங்கங்கள் இன்று ஒன்றாக இணைந்து விட்டன. தற்பொழுது ஆயிரத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளார்கள். இலங்கையிலுள்ள மற்றும் சங்கங்களைப்போல எமது சங்கமும் பலம் வாய்ந்ததென அரசாங்கம் கவனத்திற்கு எடுத்துள்ளது கல்வி மந்திரியிடம் சமர்ப்பித்துள்ளமகஜரில் பாஷைப் பிரச்னை காரணமாகச் சம்பள உயர்ச்சி தடைசெய்யப்பட்டது பற்றித் தெரி... டுள்ளோம்.''

யாழ்ப்பாணம், வெள்ளி

'நாட்டில் தேசிய ஒற்றுமையை சர்வோதயம் மூலம் தான் நிலைநாட்டமுடியும் என்பதுதான் அமரர் அரியநாயகத்தின் கருத்தாகும். இவர் மக்களுக்கு சர்வோதய இயக்கத்தைப் பரப்ப விரும்பினுர். இவரை இலங்கை பெற்றதையிட்டு பெருமைப்பட வேண்டும்.''

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்று மாலை நடந்த அமரர் அரியநாயகத்தின் ஞாபகார்த்தக்கூட்டத்தில், தென்னிலங்கை சர்வோதய சிரமதான இயக்கப்பிரதான ஊழியரான திரு. ஏ. ரி. ஆரியரத்தின மேற்கண்டவாறு கூறினர்.

முதலியார் திரு. செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு பல பாகங்களிலிருந்தும், கல்விமான்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். அமரர் அரியநாயகத்தின் அஸ்தியும் இவ்வைபவத்தில் வைக்கப்பட்டிருந்தது. அமைதியான முறையில் மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்கள்.

அகிலஇலங்கை காந்தி சேவாசங்க சார்பில் நடந்த இக் கூட்டத்தில் திரு. ஆரியரத்தின மேலும் கூறியதாவது: கிராமத்தில்வாழும்மக்கள் அரசியல்வாதிகள்போல் விரோதங்கள் பார்த்து வீணுகக்காலத்தை கழிக்காதவர்கள். இந்த நிலையில் கிராமமக்கள் மத்தியில் சர்வோதயத்தைப் போதித்தால், நாட்டில் ஐக்கியம்பரவும். இதன் மூளம் நல்லதொரு சமுதாயம் இலங்கையில் உருவாக்கலாம்.

காலத்திற்குக காலம் உலகத்தில் மகான்கள் தோன்றி மறைகின்றுர்கள். அந்தப் பரம்பரையில் வந்தவர்தான் அமரர் அரியநாயகம். இவரின் இலட்சியத்தை பரப்ப தென்னிலங்கையிலுள்ள சர்வோதய இளைஞர்கள் என்றென்றும் உழைப்பார்கள்.

முதலியார் சின்னத்தம்பி கூறியதாவது: அமரர் அரியநாயகம், யாழ்ப்பாணத்திற்கோ அல்லது இலங்கைக்குமட்டுமோ உரியவரல்லர். அவர் உலகத்திற்கே ஒரு சுடராக விளங்கினுர். அவரின் வாழ்க்கைச்சரித்திரத்தை எழுதி மாணவர் மத்தியில் பரப்பவேண்டும். அவர் சீர்மையிலிருந்து பட்டம் பெற்றுவரும்போதுலட்சியதாகத்துடன் வந்தார். முன்பு அவரிடம் ஆங்கில மோகம் இருந்தாலும், இந்தியாவில் நடந்த புனித போருக்குப்பின், ஆங்கில மோகம் அகன்று தேசிய உணர்ச்சி மேம்பட்டவராக ஆங்கில உடையை உதறித் தள்ளிவிட்டு வந்தார். அவர் எந்தப் பெரிய பதவியையும் ஏற்க மறுத்து உலகைமையமாக வைத்து வாழ்கின்ற துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

திருவாளர் கு. நேசையா ச. அ. அம்பிகைபாகன் மற்றும் பலர் பேசினுர்கள்.

## கத்தோலிக்க ஆசிரியர்கள் எங்கும கடமையாற்ற வேண்டும

### யாழ்ப்பாண வரவேற்பில் திருமலை துணைஆயர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''திருச்சபையின் பொதுச் சங்கத்தின் அறிக்கைக்கிணங்க கத்தோலிக்க ஆசிரியர்கள் எங்கும் சென்று கடமையாற்ற வேண்டியது அவசியமாகும். ஒருகுறிக்கப்பட்ட இடம்மாத்திரம் எமக்குச் சொந்தமென்றில்லை, எல்லாஇடமுமே ஆசிரியர்கள் சென்று கடமையாற்ற வேண்டும். நேர்மை, கடமை, ஒழுக்கம், பேச்சு முதலியவை மாத்திரம் ஆசிரியர்களுக்கு இருந்தால் போதாது. ஆண்டவனின் அன்புச்செயல்களை எடுத்தியம்பவேண்டியது ஒவ்வொரு கத்தோலிக்க ஆசிரியரதும் கடமையாகும்.''

மேற்கண்டவாறு திருகோணமலை துணைஆயராக நியமிக்கப்பட்ட திருவருட் செல்வர் திரு. பி. தியோகுப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் நேற்று தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இவ்வைபவத்துக்கு அதி வண. சுவாமி திரு ஜே. மதுரநாயகம் தலைமை தாங்கினுர். நல்லூர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஜி. அரசரத்தினம், வடமாநிலக் கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு உட்பட பலர் அவரது சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்கள்.

[ந. நி]

வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் திரு. எஸ். அம்பிகைபாகன் கூறியதாவது:

''ஒரு பாடசாலைக்கு ஆசிரியர்கள், அதிபர் எப்படி அவசியமோ அதேபோன்தான் நீங்களும் அவசியமானவர்கள். கோரிக்கைகள் அகில இலங்கை ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டால் நிச்சயம் நிறைவேற்றப்படும். பாடசாலைக் கணக்குகளில் அரசாங்கம் மிகவும் கண்டிப்பாக இருக்கிறது. ஆதலால் உங்களுக்குப் பயிற்சி வகுப்புகள் வைக்கவேண்டியது அவசியம். அதன்மூலம் உங்கள் எதிர்காலத்தைச் சிறப்படையச் செய்யலாம்.''

அ. நி.

## பெற்றுர் ஆசிரிய சங்கம்

### அங்குரார்ப்பணம

பேசாலை, வெள்ளி

பேசாலை பெற்றேர் ஆசிரிய சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பத்திமா ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வண பிதா பெனடிக்ற் குசைப்பிள்ளை தலைமைவகித்தார்.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வ. சாமிநாதர் [தலைமை ஆசிரியர்], உபதலைவர்: அ அருளானந்தம் குருஸ், செயலாளர்: செ. சூசையப்பு லெம்பேட், உபசெயலாளர்: சை. சந்தியா பீரிஸ், தனதிகாரி: சந்தியா குருஸ்.

7 பேர் கொண்ட நிர்வாக சபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

பூநகரி செட்டிய குறிச்சிப் பகுதிக்கு கிராம சேவையாளராக திரு. சதாசிவம் இடமாற்றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org